# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 10 வெள்ளிக்கிழமை 26.07.2024 கதிர் 312



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram
Youtube Channel




# செப். 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு!

## விசேட வர்த்தமானி வெளிவந்தது

**2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.**

**அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. [05]**




## கட்டுப்பணம் தொடர்பில் அறிவிப்பு வெளியானது

ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

“செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மக்கள் தெரிந்துகொள்வதற்காக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஓகஸ்ட் 15ஆம் திகதி முற்பகல் 9 - 11 மணி வரை இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்படும்.

தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் தொடர்பில் அன்றைய தினமே முற்பகல் 9 - 11.30 மணி வரை ஆட்சேபனைகளையும் தெரிவிக்க முடியும். எதிர்த் தரப்பு வேட்பாளர் அல்லது அவர் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்யும் நபர்களால் இந்த ஆட்சேபனைகளை

2

## கட்டுப்பணம் செலுத்தினார் ரணில் நால்வர் இன்றே முந்தினராம்!



ஜனாதிபதித் தேர்தலுக்காக ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி றொனால் சி பெரேரா இன்று வெள்ளிக்கிழமை பகல் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

சுயாதீன வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று காலை வெளியான நிலையில் முதலாவதாக ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்காக 4 வேட்பாளர்கள் இதுவரை தமது கட்டுப்பணத்தை

2

## அமெரிக்கா வரவேற்பு



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பை வரவேற்கின்றோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயகத்துக்கான இலங்கையின் நீண்டகால அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விதத்தில் அவர்களை வலுப்படுத்தும் நீதியான - சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றோம் என்றும் அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## பொதுஜன பெரமுன திங்கட்கிழமை முடிவு



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய

2

## பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையாம்!

### சபையில் பிரதமர் கூறினார்



நடைமுறைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட அறிவிப்பொன்றை விடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டில் பொலிஸ்மா

2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மானிப்பாய் - கட்டுடைச் சந்தியில் விபத்து பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணம்

யாழ்ப்பாணம் மானிப்பாய் - கட்டுடைச் சந்தியில் வானும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சங்கானையைச் சேர்ந்த முகுந்தன் அஜந்தா என்ற 43 வயதான மூன்று பிள்ளைகளின் தாயே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றொரு பெண் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டதாகவும் மற்றும் இருவர் தப்பியோடியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் விபத்தை ஏற்படுத்திய சாரதி தப்பியோடியதாகவும் வேறொருவரை பொலிஸார் கைது செய்ததாகவும் அங்கு கூடிய பொதுமக்கள் குற்றஞ்சாட்டினார். இதனால் அப்பகுதியில் சிறிதுநேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (01)

## பதில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவாரெனில் அரசமைப்புக்கமைய அவரால் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிட்டார். (05)

## பொதுஜன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா அல்லது தமது கட்சி சார்பில் வேட்பாளராகத் தம்மிக்க பெரேராவைக் களமிறக்குவதா என்பது குறித்து மொட்டுக் கட்சி பரிசீலித்து வருகின்றது. இந்நிலையிலேயே எதிர்வரும் திங்கட்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. (05)

## கட்டுப்பணம் செலுத்தினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்ட ஊடக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை), சரத் கீர்த்திரத்ன (சுயேட்சை), ஹிட்டிஹாமிலாகே தொன் ஓஷல லக்மால் அனில் ஹேரத் (அபிநவ நிவஹல் பெரமுன), ஏ.எஸ்.பி. லியனகே (இலங்கைத் தொழிலாளர் கட்சி) ஆகியோரே குறித்த 4 வேட்பாளர்களும் ஆவர் என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## கட்டுப்பணம் தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்வைக்க முடியும். வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் சகல வேட்பாளர்களும் கட்டுப்பணத்தைச் செலுத்த வேண்டியது அவசியமாகும். அதற்கமைய தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ஷரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ஷரூபாவையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

இன்று வெள்ளிக்கிழமை (ஜூலை 26) முதல் வேட்புமனுத் தாக்கல் தினத்துக்கு முந்தைய தினமான ஆகஸ்ட் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதான நிதி அதிகாரியால் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும்." - என்றுள்ளது. (05)

# தமிழ் முற்போக்கு கூட்டணி ஒகஸ்ட் 2 இல் தீர்மானிக்குமாம்!

ஒகஸ்ட் 2 ஆம் திகதி கொழும்பில் நேரடியாகவும் மெய்நிகர் மூலமாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெறும். இதன்போது செப்டம்பர் 21 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஆராயப்பட்டு அதிகாரபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்படும், என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் நலன் சார்ந்து ஏற்கனவே செய்து கொண்டுள்ள சமூக நீதி உடன்படிக்கையை மேலும் தர முயர்த்துவது, அதன் சாராம்சங்களை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெறச் செய்வது, ஐக்கிய மக்கள் கூட்டணியில் சட்டபூர்வமாக இணைவது ஆகியவை தொடர்பாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் நகல் யாப்பை ஆராய்ந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

இதையடுத்து இடம்பெறக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகவும் நடைபெறவுள்ள அரசியல் குழுவில் காத்திரமாக ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# பொலிஸ்மா அதிபர் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் ரணில் பதவி விலக வேண்டும்

## சபையில் சஜித் வலியுறுத்து

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள இடைக்கால உத்தரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இதனை இன்று தெரிவித்துள்ள சஜித் பிரேமதாஸ, தேசபந்து தென்னக்கோனின் நியமனம் அரசமைப்பின் பொருந்தக்கூடிய விதிகளுக்குள் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஜனாதிபதி இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பியோட முடியாது. ரணில் விக்கிரமசிங்க இன்னமும் ஜனாதிபதி. அவர் ஜனாதிபதி வேட்பாளர் என்பதால் தனது கடமைகளைப் புறக்கணிக்க முடியாது. ஜனாதிபதியால் இதனைச் செய்ய முடியாவிட்டால் அவர் பதவி விலக வேண்டும்" - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி 12 பேர் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது!

ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் இன்று வரையான 5 நாட்களில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் 12 மோசடி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டார், நியூசிலாந்து, மலேசியா, ருமேனியா, கனடா ஆகிய நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை ஏமாற்றிய 5 பெண்கள் உட்பட்ட இந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி நியூசிலாந்தில் வேலை வாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்திய குருநாகலில் உள்ள சட்டவிரோத முகவர் நிறுவனம் ஒன்றும் சோதனையிடப்பட்டதுடன், அங்கு இருந்த 108 கோப்புகளும் அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் திருகோணமலையில் விழிப்புணர்வு நிகழ்வு





(எம்.எம்.றம்ஸீன்)

அரசகருமமொழிகள்தினத்தினை நடைமுறைப்படுத்தும் முகமாக மாவட்ட செயலகத்திலுள்ள அனைத்து கிளைகளிலுமுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமானது நேற்று (25) திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரசகரும மொழிகள் வாரம் மற்றும் தினத்தினை முன்னிட்டு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்வின் முதல் நாள் நிகழ்வாக, அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழிக்கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டது.

மொழிக் கொள்கையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம், இலங்கையின் அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான சட்டங்கள், அரசகரும மொழிக்கொள்கையின் சட்டப் பின்னணி, 1978 அரசியலமைப்பின் 3ஆம் அத்தியாயத்தில் - அடிப்படை உரிமைகள், நிர்வாக கட்டமைப்பு, அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகளை வழங்குதல், பிரதான அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கல் அலுவலரின் பொறுப்பு, அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கல் அலுவலரின் பொறுப்பு, அரசகரும மொழிகள் தினத்துடன் இணைந்த வாரத்தைக் கொண்டாடுதல், அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் அனுகூலங்கள் எனப் பல விடயங்கள் இதன்போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் சட்டத்தரணியும் ஏ.சி.எம் முஸிலினால் தெளிவூட்டப்பட்டன.

இதன்போது மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.





# திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை மகோற்சவ வெள்ளித் திருவிழா

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவம் தற்போது நடைபெற்று வருகிறது.

இன்று கரவாகுப்பற்று மக்களின் பூசையானது ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

பகல் திருவிழாவின்போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு இறை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ஆலயப் பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், சாமி குருக்கள், ஆலய குரு சிவ ஸ்ரீ அங்குசநாதர் குருக்கள் முன்னிலையில் ஆலய வண்ணக்கர் வ.ஜயந்தன் சகிதம் மேளதாளத்தோடு மிகவும் சிறப்பாக இந்தத் திருவிழா நடைபெற்றது

# சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுப்பு






(எம்.எப்.நவாஸ்)

சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டம் 2024 இன் கீழ் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை செயற்படுத்தும் நடவடிக்கைகள் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் அண்மையில், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் அஷ்ஷேஹ் எஹியா றாசித்தின் பங்குபற்றலுடன், தலைமைப்பீட முகாமையாளர் அஷ்ஷேஹ் எம்.ஜே.எம்.நிஹ்மதுள்ளா தலைமையில் நிகழ்வொன்று இடம்பெற்றது.

இதில், வளவாளர்களாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இஸட்.அப்துர் றகுமான், நிந்தவூர் தொழில் பயிற்சி அதிகார சபையின் திட்ட உத்தியோகத்தர் எம்.எம். மஹ்சூன் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரை நடாத்தினர்.

நிகழ்வில் திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், திட்ட உதவியாளர் முஹாஜிர், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சீ.எம்.தஸ்லீம், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொழில் முனைவோருக்கான ஆர்பிஎல் முறையின் கீழ் என்விக்யூ சான்றிதழ் வழங்கப்படுவது சம்பந்தமான பயிற்சி வேலைத்திட்டம் ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகங்களில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் மா அதிபருக்கு தடை உத்தரவே விதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை!

## ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது



நீதிமன்ற தீர்ப்பின்படி பொலிஸ் மா அதிபருக்கு தடை உத்தரவே பிறப்பிக்கப்பட்டுள்ளமையால், மேற்படி பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை பெற்றுள்ளது.

இதன்படி, 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம், பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாக இல்லாத நிலையில், ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்தான சட்டப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை பொலிஸ் மா அதிபர் பதவி நிரப்பப்படாமல் அப்படியே இருக்கும் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது பொலிஸ் மா அதிபர் தனது கடமைகளை மேற்கொள்வதில் மாத்திரமே தடையாக இருக்கும் என குறித்த சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெஜ-67)

# பொலிஸ் மா அதிபர் தொடர்பில் பேசுகின்ற எதிர்க்கட்சியினர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்தும் பேசாததேன்?

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றில் கேள்வி



பொலிஸ் மா அதிபர் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு காரணமாக பாதாள உலக குழுக்களே மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர் எனவும், பாதாள உலகத்தினரே எதிர்க்கட்சிக்கு புகலிடம் வழங்குகின்றனர் என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க நேற்று (25) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பது தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் “ஜனாதிபதியும், அமைச்சரவையும், அரசாங்கமும் நீதித்துறையை சங்கடப்படுத்தும் வகையில் செயற்படுவதாக ஒரு கருத்தை உருவாக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்.

21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து நீதித்துறையை சுயாதீனமிக்கதாக மாற்றுவதற்கு ஜனாதிபதியே பாடுபட்டவராவார். அமைச்சரவையும் அரசாங்கமும் அதை மதிக்கின்றன. அதனால் அதற்கு மேல் பேச ஒன்றுமில்லை.


நீதிமன்றம் இவ்வாறு மூன்று தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. தேவைப்பட்டால் அரசு தலையிட்டு அவற்றை தடுத்து நிறுத்தியிருக்கலாம். முதலாவது- உள்ளூராட்சி நியமனங்கள் தொடர்பானது.

இரண்டாவது - தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பானது. மூன்றாவது - பொலிஸ் மா அதிபர் தொடர்பான இடைக்கால தடை உத்தரவு. ஆனால், எதிர்கட்சியினர் பொலிஸ் மா அதிபர் பற்றி மட்டுமே பேசுகிறார்கள். இந்த உத்தரவால் பாதாள உலக குழுக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பாதாள உலகம் எதிர்க்கட்சிகளுக்கு அடைக்கலம் கொடுக்கின்றது. அதனால்தான் எதிர்க்கட்சிகள் இதில் ஆர்வம் காட்டுகின்றன. மற்றபடி பொலிஸ் மா அதிபர் பற்றி பேசுபவர்கள் ஏனைய இரண்டு தீர்ப்புகள் பற்றியும் ஏன் பேசவில்லை? எனவே, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்தும் எதிர்க்கட்சிகள் பேச வேண்டும். இந்த நாட்டை தவறான திசையில் கொண்டு செல்ல வேண்டாம் என எதிர்க்கட்சிகளை கேட்டுக் கொள்கின்றோம்” என்றார்.

(ரெஜ-68)



# இரண்டு முதன்மை பொலிஸ் அதிகாரிகள் நீக்கப்பட்டதால் நிர்வாகப் பணிகள் முடக்கம்!

## பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

பொலிஸ் திணைக்களத்தின் இரண்டு முதன்மைப் பதவிகளை வகித்த இரண்டு அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டதன் மூலம், திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் மா அதிபர் மற்றும் மற்றும் பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் குறித்த பதவிகளுக்கான அதிகாரிகள் நியமிக்கப்படாமையின் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபரின் பிரத்தியேக உதவியாளர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இந்நிலையில் இரண்டு நாட்கள் பொலிஸ் காவல் துறையின் நிர்வாகப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன எனவும் மேற்படி பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெஜ-69)

# இலங்கையைச் சுற்றி நடைபவனியில் ஈடுபட்டுள்ளவருக்கு பொத்துவில் அறுகம்பையில் சிறப்பான வரவேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

"சுதந்திரமான ஒரு நாட்டை கட்டியெழுப்புவோம்!" எனும்தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை பேருவளையைச் சேர்ந்த எம்.எஸ்.எம். சஹ்மி கடந்த 13ம் திகதி பேருவளை நகரில் இருந்து ஆரம்பித்திருந்தார்.

கடந்த 12 நாளாக காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனறாகல, சியம்பலாண்டுவ ஊடக பொத்துவிலுக்கு வருகை தந்த சஹ்மியை நேற்று வியாழக்கிழமை (25) காலை பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் வைத்து அறுகம்பை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தினர் வரவேற்று, வாழ்த்தி, பாராட்டு தெரிவித்து வழியனுப்பினர்.

இந்நிகழ்வில் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஏ.முசம்மில் மற்றும் அதன் உறுப்பினர்கள், பிரமுகர் முகம்மட் நௌசர் மற்றும் அறுகம்பை பிரதேசத்திற்கு சுற்றுலா வருகை தந்திருந்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர் பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று வழியாக மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் சென்று மன்னார் வழியாக அனுராதபுரம், புத்தளம் ஊடாக கொழும்பு, பேருவளை செல்லவுள்ளதாக நடைபவனியில் ஈடுபட்டுள்ள சஹ்மி தெரிவித்தார்.



# காரைதீவு – மண்டூர் ஸ்ரீ முருகன் வருடாந்த தலபாத யாத்திரை ஓகஸ்ட் 17 ஆம் திகதி




(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த தலபாத யாத்திரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை காரைதீவிலிருந்து நடைபெற இருக்கிறது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி 19 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை இடம் பெறுவது வழக்கம்.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து இந்த பாரிய பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்படும் பாதயாத்திரை கல்முனை நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு கிட்டங்கி நாவிதன்வெளி வேப்பையடி தம்பலவத்தை ஊடாக மண்டூரைச் சென்றடையும்.

தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித்தின் அன்னதான நிகழ்வு இம்முறையும் இடம்பெறும் என சங்கச்செயலாளர் கு.ஜெயராஜ் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சபைக்கு சுவர்ணபுரவர தேசிய விருது



(அஸ்லம் எஸ்.மௌலானா)

மாநகர சபைகளுக்கிடையே நடாத்தப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டில் கிழக்கு மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட கல்முனை மாநகர சபைக்கு, சுவர்ணபுரவர தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (25) நடைபெற்ற சுவர்ணபுரவர தேசிய விருது விழாவின்போது கல்முனை மாநகர சபைக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜங்க அமைச்சர் ஜனக வக்கும்பர, அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உலக வங்கி மற்றும் ஆஷியா பவுண்டேஷன் என்பவற்றின் இலங்கைக்கான வதிவிடப் பிரிதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸிடம் இவ்விருதை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமான என். மணிவண்ணன் மற்றும் கல்முனை மாநகர சபையின் சார்பில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.சாஹிர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

செயற்றிறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபையானது மாகாண மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் வென்றுள்ளது.

இந்த விருதைப் பெறுவதற்கு காரணமாக அமைந்த கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர், முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.



# மகளிர் ஆசியக் கிண்ண தொடர் இந்திய அணி இறுதிப் போட்டியில்!

மகளிர் ஆசியக் கிண்ண தொடரில் ஒன்பதாவது தடவையாகவும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதுவரை இந்திய அணியின்றி இறுதிப் போட்டி நடைபெற்றதில்லை என்பதோடு, ஒரு தடவை மாத்திரமே அவர்கள் கிண்ணத்தைத் தவறவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் - இந்திய அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் நிகார் சுல்த்தான் 32 ஓட்டங்களையும், ஷொர்னா அக்டேர் 19 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் ரேணுகா சிங், ராதா யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பாடிய இந்திய மகளிர் அணி 11 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ம்ரிதி மந்தனா 51, ஓட்டங்களையும், ஷபாலி வர்மா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள அடுத்த அரையிறிதியிப் போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.



# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் குழுவினர் பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு விஜயம்





யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர்எஸ்.ஸ்ரீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற் றும் விருந்தோம்பல் முகாமைத் துவத்தின் நிகழ்ச்சித் தலைவர் பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தியுடன் இணைந்து கடந்த 23 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு மரியாதை நிமித்தமான விஜயமொன்றை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணசர்வதேசவிமான நிலையத்தில் சிறப்பு கவனம் செலுத்தி, பிராந்திய விமான நிலைய அபிவிருத்திக்கான கூட்டு முயற்சிகளுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய வதற்காக ஏஏஎஸ் எல் இன் தலைவர், துணைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் ஒரு சந்திப்பை அவர்மேற்கொண்டார்.

சமூக - பொருளாதார மேம்பாட்டிற்காக வடக்கு பிராந்தியத்தில் உள்ள தேசியப் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலோபாய முக்கியத்துவத்தை துணைவேந்தர் இதன்பொது எடுத்துரைத்திருந்தார்.






## திடீர் சுற்றிவளைப்பில் காலாவதியான மருந்து பொருட்கள் கண்டுபிடிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் காலா வதியான மருந்துப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி கள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 6 மருந்தகங்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக சபையின் உயர் அதிகாரிகாரியொருவர் தெரிவித்தார்.

திருகோணமலை நீதவான் நிதிமன்றத்தில் கடந்த புதன் கிழமை (24) வழக்குத் தொடரப்பட்ட நிலையில், தலா 10,000 ஷரூபா தண்டப்பணமும், 10 வருட ஒத்திவைக்கப்பட்ட ~~சிறைத்தண்டனையும் வழங்கிய~~ நீதவான், மீண்டும் ஒரு முறை இக்குற்றத்தை செய்யுமிடத்து 10 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் என மன்றில் தெரிவித்தார்.



## காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட 5ஆம் கட்டை கடவான காட்டுப் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிரதேச மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் உப்புவெளிப் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்று (25) அதிகாலையில் தனது மாடுகளை மேய்த்துக்கொண்டு காட்டுப்பகுதிக்குச் சென்ற 44 வயதுடைய கே.ஜீ.நிலந்த இன்துனில் என்பவரே இவ்வாறு காட்டுயானையின் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக தெரி விக்கப்படுகின்றது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோண மலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2024இல் வெளியிடப்பெற்றது.